# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை 18.11.2025 கதிர் 374







# தென் மாகாண ஆளுநருக்கு வடக்கு ஆளுநர் இறுதி அஞ்சலி!



காலி, நவ. 18

தென் மாகாண ஆளுநரின் பூதவுடலுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இன்று செவ்வாய்க்கிழமை இறுதி அஞ்சலி செலுத்தினார்.

தென் மாகாண ஆளுநர் பந்துல ஹறிசந்திர கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவரின் பூதவுடல் காலியில் அமைந்துள்ள மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பொது அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று அங்கு நேரில் சென்ற வடக்கு மாகாண ஆளுநர் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், உறவினர்களுக்கு தனது இரங்கல்களையும் தெரிவித்தார்.

# நம்பி வாக்களித்த தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது அநுர அரசாங்கம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விசனம்




யாழ்ப்பாணம், நவ. 18

"மாற்றம் என்று சொல்லி இனவாதமற்ற புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாகும் என்று நம்பி வாக்குச் செலுத்திய தமிழ் மக்கள் இன்று முழுவதுமாக அரசினால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். இது இன்று நேற்றல்ல 76 வருடகாலமாக இந்த நாட்டில் இதுதான் நடந்தேறியிருக்கின்றது." - என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"திருகோணமலையில் தமிழர் தாயகத்தில் கடற்கரைப் பிரதேசத்தில் சட்டத்துக்கு முரணாகப் புத்த பிக்குகளினால் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டிருக்கின்றது.

அங்குள்ள தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பின் பின் சட்ட அனுமதியற்ற கட்டுமானம் என்று சொல்லி அந்தப் புத்தர் சிலை பொலிஸாரால் அப்புறப்படுத்தப்படுகின்றது. இதன்பிறகு நாடளுமன்றத்தில் அரசால் புத்தர் சிலையின் பாதுகாப்பு காரணமாகத்தான் அப்புறப்படுத்தப்பட்டது, மீண்டும் நிறுவப்படும் என்ற பின் மீண்டும் அதே இடத்தில் அரசால் புத்த பிக்குகள் மற்றும் பொலிஸாருடன் இணைந்து அதே புத்தர் சிலை நிறுவப்படுகின்றது.

மாற்றம் என்று சொல்லி இனவாதமற்ற புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாகும் என்று நம்பி வாக்குச் செலுத்திய தமிழ் மக்கள் இன்று முழுவதுமாக அரசினால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். இது இன்று நேற்றில்லை 76 வருடகாலமாக இந்த நாட்டில் இதுதான் நடந்தேறியிருக்கின்றது.

7➤

# நுகேகொடை கூட்டம்: ரவிக்கு கதவடைப்பு?



கொழும்பு, நவ. 18

நுகேகொடையில்எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள பேரணியில் பங்கேற்குமாறு தமக்கு இன்னும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக்

7➤

# முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதியமும் இரத்து!

## சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அமைச்சரவை அனுமதி



கொழும்பு, நவ. 18

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்குரிய சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த

7➤

# யாழில் இன்று ரயிலுடன் மோதி ஒருவர் சாவு!

*யாழ்ப்பாணம், நவ. 18*

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள ரயில் கடவைக்கு அருகில் இன்று செவ்வாய்க்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நல்லூர் பகுதியைச் சேர்ந்த விஜயரத்னம் மோகன்தாஸ் (வயது 42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





## ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் கடுமையான மூடுபனி

கொழும்பு, நவ.18

ஹட்டன் முதல் நுவரெலியா வரை நீண்டு செல்லும் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் தற்போது கடுமையான மூடுபனி நிலைமை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசமான வானிலை காரணமாக வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதோடு, விபத்துகளைக் குறைப்பதற்காக பொலிஸ் அதிகாரிகள் வாகனச் சாரதிகளிடம் விசேட கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

வீதியில் பயணிக்கும் அனைத்து சாரதிகளும் தமது வாகனங்களின் முன்விளக்குகளை (ஹெட்லைட்ஸ்) முறையாக ஒளிரச்செய்து, கவனமாகவும் மிகக் குறைந்த வேகத்திலும் பயணிக்க வேண்டும் என பொலிஸார் கடுமையாக அறிவுறுத்துகின்றனர்.

விபத்துகளைக் குறைப்பதற்கு சாரதிகளின் விழிப்புணர்வும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியம் என பொலிஸார் மேலும் வலியுறுத்துகின்றனர்.

எனவே, வாகனச் சாரதிகள் இந்த அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ஐ)

## 350 மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை! விசேட செயலியை அறிமுகப்படுத்தவும் திட்டம்

கொழும்பு, நவ.18

அத்தியாவசிய சிகிச்சைகளை மக்களுக்கு மேலும் மலிவு விலையில் கிடைக்கச் செய்யும் நோக்குடன், 350 வகையான மருந்துகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் இதனை குறிப்பிட்டார்.

ஒழுங்குபடுத்தப்பட்ட விலையில் மருந்துகள் கிடைப்பதை உறுதிசெய்வதன் மூலம் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்றும்,

இதன்மூலம் உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள் உட்படப் பல முக்கியமான மருந்துகளின் விலை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உதாரணமாக, புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் பேக்லிடேக்செல் **(Paclitaxel)** மருந்தின் ஒரு குப்பியின் விலை 42,000 ரூபாவிலிருந்து 26,332 ரூபாய் 29 சதமாகவும் குடற் புழுத் தொற்றுக்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும்



**Mebendazole 500 mg** (மெபெண்டசோல்) மாத்திரையின் விலை 83 ரூபாவிலிருந்து 50 ரூபாய் 25 சதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயப் பொறிமுறை தொடரும் என்றும், புதிதாகப் பதிவுசெய்யப்படும் மருந்துகளுக்கும், உரிமம் புதுப்பிக்கப்படும் மருந்துகளுக்கும் புதிய கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், நுகர்வோர், மருந்துகள் மற்றும் அவற்றின் விலையை எளிதாக அறிந்துகொள்ள ஒரு கைபேசி செயலியை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதுடன், மருந்தகங்கள் அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் மருந்துகளை விற்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.



# இளைஞர்கள், குழந்தைகள் மத்தியில் அதிகரிக்கும் காய்ச்சல் – சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை



இவ்வருடத்தில் வழமையை விட அதிக அளவிலான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்படலாம் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும் எதிர்வரும் சில வாரங்களில் இது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோய்க்கான அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக முகக் கவசம் அணிவதுடன் மற்றவர்களுடனான நேரடி தொடர்பினை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

இந்த நிலையில், ஹெர்ட்ஃபோர்ட்ஷயர் மாவட்ட பொதுச் சுகாதார நிர்வாக உறுப்பினர் அஜந்தா ஹல்டன், தேசிய விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகளுக்காக அழைப்பு விடுத்துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

## வாக்களித்த தமிழருக்கு முழுத் துரோகத்தை இழைத்துள்ளீர்கள்! சபையில் கஜேந்திரகுமார் எம்.பி சீற்றம்



உங்களை நம்பி, நீங்கள் சொன்னதையெல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நீங்கள் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கின்றீர்கள்.

என தேசிய மக்கள் சக்தி அரசைக் கடுமையாகச் சாடி இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

நீதி அமைச்சு மீதான விவாதத்தின்போது திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக பௌத்த வணக்கஸ்தலம் அமைக்கப்பட்டு வருகின்றமைக்கும்

அங்கு அடாத்தாகப் புத்தர் சிலை நிறுவப்பட்டமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து உரையாற்றும்போதே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்

“திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை நேற்று இரவு அகற்றிய போது

சாதாரண சிங்கள மக்கள் அதை எதிர்க்கவில்லை.

ஏனெனில் இனவாதத்தையும் மதவாதத்தையும் நீக்குவதாக நீங்கள் சொன்னதை நம்பி அவர்கள் உங்களுக்கே வாக்களித்திருந்தார்கள்.

இங்கிருக்கும் திருகோணமலைக்கான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

நீங்கள் நேற்று இரவு எடுத்த நடவடிக்கையை எதிர்த்ததெல்லாம் சிங்களக் காடையர்கள் மட்டுமே. அதைக்கண்டு நீங்கள் உண்மையில் பின்வாங்கியிருந்திருக்கக்கூடாது. அந்த இனவாத - மதவாத காடைத்தனத்தைக் கண்டு பின்வாங்கியிருந்திருக்கக்கூடாது.

உண்மையில் நீங்கள் என்ன செய்திருக்க வேண்டுமெனில், மக்களிடம் சென்று எது சரி, எது பிழை என்பதை, எப்படியான அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நேர்மையுடன் சொல்லியிருந்திருக்க வேண்டும்.

ஆனால் , அதற்குப் பதிலாக நீங்கள் இப்போது செய்ததெல்லாம் (மீண்டும் புத்தர் சிலையை அதே இடத்தில் நிறுவியமை), நீங்கள் (இனவாதிகள் இல்லை என) சொன்னதை நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கும் உங்களுக்கு வாக்களித்த சிங்களவரல்லாத வாக்காளருக்கும் முழுமையான தூரோகத்தை இழைத்திருக்கின்றீர்கள் என்றார். (ஐ)

## திருமலை புத்தர் சிலை விவகாரத்தை இனவாதப் பிரச்சினையாக்காதீர்கள்! நாமல் வலியுறுத்து



கொழும்பு, நவ.18

“திருகோணமலை புத்தர் சிலை விவகாரப் பிரச்சினையை இனவாதப் பிரச்சினையாக மாற்றுவதற்கு இடமளிக்காதீர். அரசு உடனடியாகத் தலையிட்டு இரு தரப்பினரையும் அழைத்துப் பேச்சு நடத்தி பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டும்.”- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திருகோணமலை புத்தர் சிலை சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“திருகோணமலையில் விகாரை பிரச்சினை ஏற்பட்டுள்ளது. புத்தர் சிலையைப் பாதுகாப்புக்காகவே அந்தச் சிலை ஞாயிற்றுக்கிழமை இரவு அங்கிருந்து எடுக்கப்பட்டது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால், பொலிஸாரின் தாக்குதலில் இரு பிக்குகள் காயமடைந்துள்ளனர்.

இந்த விகாரை 1952 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டில் புனித பூமியாக்கப்பட்டுள்ளது. கிழக்கில் பழமையான அறநெறி பாடசாலையும் இங்குள்ளது.

எனவே, அரசு உடனடியாகத் தலையிட்டு பேச்சு நடத்த வேண்டும். இதனை இனவாதப் பிரச்சினையாக மாற்றுவதற்கு இடமளிக்கக் கூடாது. இரு தரப்பினரையும் அழைத்துப் பேச்சு நடத்தி தீர்வை வழங்க வேண்டும்.” - என்றார். (ஐ)

## தனக்கு சிலையை அமைக்குமாறு கௌதம புத்தர் கேட்கவில்லை மனோ கணேசன்



தனக்கு சிலையை அமைக்குமாறு கௌதம புத்தர் கேட்கவில்லை சட்டத்தை கையில் எடுத்து, மத தலங்களை அமைக்க அல்லது இடிக்க, எவருக்கும் உரிமை இல்லை.

திருகோணமலையில் சட்டவிரோத சிலை அமைக்கும் பிக்குகள் தடுக்க பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை பதட்ட நிலை தொடர்பில், தற்போது இந்திய பயணத்தில் இருக்கும் மனோ கணேசன் எம்பி தனது எக்ஸ்-தள செய்தியில் கூறியுள்ளதாவது

ஒருங்கிணைந்த இலங்கையின் அடிப்படை, நமது நாட்டு இன, மத, மொழி பன்மைத்துவம் ஆகும். எந்த மத தலைவருக்கும், பனாமைத்துவத்சை குழப்பி, சட்டத்தை மீறி, மத தலங்களை அமைக்கவும் இடிக்கவும், எந்த உரிமையும் கிடையாது.

திருகோணமலையில் சட்டத்தை மீறி சிலை அமைக்கும் பிக்குகளின் செயலை கண்டிக்கிறேன். தனக்கு சிலையை அமைக்குமாறு கௌதம புத்தர் கேட்கவில்லை.

நாட்டின் அரசாங்கம், அடிப்படைவாதத்திற்கு விட்டு தராமல், அதை கட்டுப்படுத்தி, சட்டத்தின் ஆட்சியை தெளிவாக அமுல்படுத்த வேண்டும். (ஐ)

## முல்லைத்தீவில் மாவீரர் துயிலும் இல்ல சிரமதான பணிகள் ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்லத்தினுடைய 2025 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கான சிரமதான பணிகள் நேற்றுஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களுக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

அந்த வகையிலே கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்ல பிரதேசத்தை அண்டிய அயல் கிராமங்களில் உள்ள மக்கள் மாவீரர்களின் பெற்றோர் உரித்துடையோர் அனைவரையும் குறித்த சிரமதான பணிக்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளில் அனைத்து உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் பணிக்குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)





# இன்று விடுமுறை எடுத்தால் ஊதியம் ‘கட்’ அரசு ஊழியர்களுக்கு தலைமை செயலர் எச்சரிக்கை



‘தமிழக அரசு ஊழியர்கள் இன்று விடுமுறை எடுத்து போராட்டத்தில் ஈடுபட்டால், ஒரு நாள் சம்பளம் பிடித்தம் செய்யப்படும் துறை ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்படும்’ என, தலைமை செயலர் முருகானந்தம் எச்சரித்துள்ளார்.

பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்கள் வலியுறுத்தி வருகின்றன.

ஆதரவு ஆனால், அவற்றை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்காததால், தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பான, ‘ஜாக்டோ - ஜியோ’ சார்பில், இன்று ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு, தலைமை செயலக சங்கம், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் சங்கம் உட்பட, பல்வேறு சங்கங்கள் ஆதரவு தெரிவித்து உள்ளன.

இதேபோல, எஸ்.ஐ.ஆர்., கணக்கெடுப்பு படிவ வினியோக பணியை புறக்கணிக்கப் போவதாக, வருவாய் துறை அலுவலர்கள் சங்கமும் அறிவித்துள்ளது. இதனால், இன்று அரசு பணிகள் மட்டுமின்றி, எஸ்.ஐ.ஆர்., பணிகளும் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நடவடிக்கை இந்நிலையில், இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட, தற்செயல் விடுப்பு எடுக்கும் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் பிடித்தம் செய்யப்படும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என, தலைமை செயலர் முருகா னந்தம் எச்சரித்து உள்ளார். இது தொடர்பாக, அனைத்து துறை செயலர்கள், கலெக்டர்கள் உள்ளிட்டோருக்கு சுற்றறிக்கையும் அனுப்பிஉள்ளார். (ஐ)

## தி.மு.க.,வை வெல்ல எந்த சக்தியும் இல்லை



எஸ்.ஐ.ஆர்., எனப்படும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி தேவையில்லை என்பது தி.மு.க., நோக்கம் அல்ல. எஸ்.ஐ.ஆர்., பணிக்கு போதிய கால அவகாசம் இல்லை என்பதால் தான் எதிர்க்கிறோம். பீஹாரில் நடந்தது போல், தமிழகத்தில் நடக்காது. பீஹார் மாடல் தமிழகத்தில் எடுபடாது. தி.மு.க, கூட்டணி உறுதியானது வலிமையானது. இதை சுக்கு நூறாக உடைக்க எந்த சக்தியும் இல்லை. பிரதமர் மோடி காணும் கனவு, தமிழகத்தில் பலிக்காது.

தி.மு.க., கூட்டணி, எந்த அளவுக்கு வலிமையானது என்பதை 2026 தமிழக சட்டசபை தேர்தலில் நிரூபிப்போம். தி.மு.க.,வை வெல்ல இந்தியாவில் எந்த சக்தியும் இல்லை.

காங்கிரஸ் கட்சி காணாமல் போகும் என மோடி சொல்வதைப் பற்றி எல்லாம் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தியாவில் எந்தவொரு கட்சியும் காணாமல் போவதற்கான வாய்ப்பு கிடையாது. தோல்வியடைந்த எல்லா கட்சிகளும், ஒரு காலத்தில் வளரும் ஏற்கனவே அப்படி வளர்ந்த உதாரணங்களும் உள்ளன. (ஐ)

## மக்களை தேடி மருத்துவ திட்டம் முதல்வர் பெருமிதம் முதல்வர் பெருமிதம்



‘மக்களை தேடி மருத்துவ திட்டம் வாயிலாக, 2.50 கோடி பேரின் நலம் காக்கப்பட்டுள்ளது’ என, முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

நான்கு ஆண்டுகளில், 2.50 கோடி மக்களின் நலம் காத்துள்ளது, மக்களை தேடி மருத்துவம். தடம் மாறாத பயணம், தொற்றா நோய்களின் கட்டுப்பாடு என சாதனை படைத்து, ஐ.நா., விருதை இத்திட்டம் வென்றுள்ளது.

இந்த திட்டத்தின் 2.50 கோடி பயனாளியான, தஞ்சாவூர் மாவட்டம் தென்னங்குடியைச் சேர்ந்த மனோன்மணிக்கு மருந்து பெட்டகத்தை, மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சுப்பிரமணியன் வழங்கியதற்கு வாழ்த்துகள்.

இந்த திட்டத்தை கண்காணித்து, சிறப்பாக செயல்படுத்தி வரும் துறையின் செயலர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும், களத்தில் உறவென நின்று மக்களை கவனித்துக் கொள்ளும் மருத்துவ பணியாளர்களுக்கும் வாழ்த்துகள். இவ்வாறு முதல்வர் கூறியுள்ளார். (ஐ)



# நாளை போராட்டம் 132 விவசாயிகள் டெல்லி பயணம்

விவசாய விளை பொருட்களுக்கு இரண்டு மடங்கு லாபகரமான விலை, அனைத்து கடன்களும் தள்ளுபடி, 60 வயது அடைந்தால் மாதம் ரூ.5,00 ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லி ஜந்தர்மந்தரில் நாளை (19ம்தேதி) முதல் தொடர் போராட்டம் நடத்த தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் முடிவு செய்தது. இதற்காக சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் 132 விவசாயிகள் திருச்சி ரயில் நிலையத்தில் இருந்து நேற்று காலை டெல்லிக்கு புறப்பட்டு சென்றனர். முன்னதாக அய்யாக்கண்ணு அளித்த பேட்டியில், எங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை அல்லது சாகும் வரை தொடர் போராட்டம் நடத்துவோம். இந்த கோரிக்கையை நிறைவேற்ற ஒன்றிய அரசு தவறினால் விவசாயிகள் சாவதை தவிர வேறு வழி இல்லை என்றார். (ஐ)

## அமீபா நோய் வேகமாக பரவி வரும் நிலையில் சபரிமலைக்கு செல்லும் தமிழ்நாட்டு பக்தர்கள் அச்சப்பட வேண்டாம்: பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

கேரளாவில் மூளையை தின்னும் அமீபா நோய் வேகமாக பரவி வரும் நிலையில் தமிழகத்தில் இருந்து சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் அச்சப்பட வேண்டாம் என தமிழக பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது.

ஆறுகள், நீரோடைகள், குளங்களிலிருந்து பரவி மூளையை தின்னும் அமீபா மூளை காய்ச்சல் பாதிப்பால் கேரளாவில் 30க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து உள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மேலும் சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் நீர்நிலைகளில் குளிக்கும்போது மூக்கிற்குள் நீர் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் போன்ற பல அறிவுறுத்தல்களை அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தமிழக பொது சுகாதாரத்துறை தமிழக பக்தர்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை அளித்துள்ளது. குறிப்பாக கொரோனா தொற்று போல இந்த நோய் பரவாது, நீர் நிலையங்களில் பாதுகாப்பாக குளிக்க வேண்டும்.

சபரிமலைக்கு சென்று திரும்பும் பக்தர்கள் மூன்று நாட்களுக்குப் பிறகு காய்ச்சல், தலைசுற்றல், உடல் வலி, வாந்தி, மயக்கம், சுவை மாற்றம், பின்கழுத்துப் பகுதி இறுக்கம் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டும்.

சபரிமலைக்கு செல்லக்கூடிய பக்தர்கள் ஏற்கனவே ஏதேனும் மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்களாக இருந்தால் அதற்கான மருத்துவ ஆவணங்கள் மற்றும் மருந்துகளுடன் பயணிக்க வேண்டும். சபரிமலை யாத்திரை புறப்படும் முன், நடைபயிற்சி போன்ற எளிதான உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கொதிக்க வைத்த நீரையே குடிக்க வேண்டும். மலை ஏறும் போது மெதுவாகவும், இடைவெளி விட்டும் ஏற வேண்டும். சபரிமலை வரும் வழியில் ஆறுகளில் குளிக்கும் போது மூக்குக்குள் நீர் செல்லாமல் பக்தர்கள் கவனமாக இருக்க வேண்டும். மேலும், கொரோனா தொற்று போல இந்த நோய் பரவாது. எனவே சபரிமலைக்குச் செல்பவர்கள் எந்த ஒரு அச்சப்படவும் தேவையில்லை என தமிழக பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. கொரோனா தொற்று போல இந்த நோய் பரவாது. (ஐ)

# தி கிரேட் இந்தியன் குடும்பங்கள்!



கனலி

உலகம் தோன்றிய பொழுது ஆதி மனிதர்கள் காடுகளுக்குள் பராரியாகச் சுற்றித் திரிந்தார்கள். நாகரிகம் தோன்றி வளர்ந்து விரிவடைந்த போது அவர்கள் தங்களுக்குள் கூடி வாழத் தொடங்கினர். ஒருவர் உணவு தேடப்போக, இன்னொருவர் குழந்தைப் பராமரிப்பு, உணவு தயாரிப்பு என்று பணிகளைப் பிரித்துக் கொண்டார்கள். அந்த இன்னொருவர் பெண்ணாக இருந்தார். அவர்கள் தங்களுக்குள் எல்லைகளை வகுத்து குடும்பம் என்கிற ஓர் அமைப்பை உருவாக்கிக் கொண்டார்கள். அந்த ஆதிக் குடும்பத்தின் நீட்சியாகவே இன்றும் ஆண்கள் பொருளீட்ட வெளியே போக, பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள்.

ஒருவருக்கு இன்னொருவர் உதவிகரமாக இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்ட இந்த அமைப்பு, நாளடைவில் ஒருவர் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்தும் ஓர் அமைப்பாக மாறத் தொடங்கியது. ஆதிக்கம் செலுத்துபவர் ஆணாகவும், அடங்கிச் செல்பவர் அடக்கி வைக்கப்படுபவர் பெண்ணாகவும் இருப்பதுதான் ஆகப்பெரும் துயரம். குடும்பமாகச் சேர்ந்து வாழத் தொடங்கிய காலகட்டத்தில் வெளியில் காட்ட முடியாத வன்முறை எண்ணங்களுக்கும் கோபதாபங்களுக்கும் வடிகாலாக வீட்டில் இருக்கும் பெண்கள்தாம் மாட்டிக்கொண்டார்கள். ஆறுதலாகவும் அரவணைப்பாகவும் இருக்க வேண்டிய உறவுகளே வன்முறையைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கினார்கள். அன்றிலிருந்து இன்று வரை குடும்பத்தில் நிகழ்த்தப்படும் வன்முறை பெரும்பாலும் வெளியே தெரிவதில்லை. அப்படியே தெரிந்தாலும் அதை சகஜமாக ஏற்றுக்கொண்டு கடந்து செல்லும் போக்குதான் மக்களிடையே இருக்கிறது.

இந்தக் குடும்ப வன்முறை கணவன், மனைவிக்கு இடையே மட்டுமல்ல வயதானவர்கள், குழந்தைகள் இடையே, வீட்டில் உள்ள மற்ற பெண்கள் புதிதாக வந்த பெண் மீது காட்டுவது என்று நிறைய உறவுகளிடம் ஏற்படலாம். பிரிந்து வாழும் தம்பதியர் இடையே, விவாகரத்து செய்து கொண்ட தம்பதியர் இடையேகூட ஒருவர் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்தும் போது அது குடும்ப வன்முறையில் சேர்ந்தது.

என் தோழி ஒரு செய்தியைப் பகிர்ந்தார். அவருடன் பணிபுரியும் பெண்கள் நிறையப் பேர் கணவரிடம் அடி வாங்குவதாகச் சொன்னார். “சட்டடென்று கை நீட்டுவார்” என்று ஒரு பெண் சொல்லும் போது, அது இயல்பென்பது போல இதரர்கள் அமைதி காப்பார்களாம். நம் தமிழ்க் குடும்பங்களில் மனைவியை அடிப்பது ஒரு கணவனின் இயல்பான செயல்தான் என்பது போல கட்டமைக்கப்பட்டிருக்கிறது. கணவன் தன்னை அடித்து விட்டான் என்று ஒரு பெண் புகுந்த வீட்டினரிடமோ அல்லது பெற்றோரிடமோ புகார் அளிக்கும் போது, அது குறித்து அவர்கள் யாரும் கொஞ்சமும் அலட்டிக் கொள்வதில்லை. “இது எல்லார் வீட்டிலும் இருப்பதுதானே? இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா?” என்றுதான் சொல்கிறார்கள். இது பெண்ணுடலின் மீது நிகழ்த்தப்படும் ஒரு வன்முறை என்று புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். அல்லது புரிந்து கொண்டாலும் தனது கருத்தை வெளிப்படையாகச் சொல்லாமல் அமைதி காக்கிறார்கள். பெண் என்பவள் கணவனின் சொத்து. அதை அவன் எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்பதையே இது வலியுறுத்துகிறது.

இன்னொரு தோழி தன் கணவன் உடல் ரீதியாகத் தன்னை அணுகிப் பல வருடங்கள் ஆனதாகத் தெரிவித்தார். ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் இருவரும் தனித்தனி படுக்கை அறைகளைத்தான் பயன்படுத்துகிறார்கள். கணவருக்கு விருப்பம் இருக்கிறதா, இல்லையா என்று எதுவும் தனக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார். இது குறித்து வெளிப்படையாக கணவருடன் பேச முயன்ற போதெல்லாம் அவருக்குக் கிடைத்தது கேவலமான வசைச்சொற்களும் அசிங்கமான பட்டங்களும்தாம். அதன் பின் பேசிய இரண்டு, மூன்று தோழிகளும் இதே விஷயத்தைத்தான் தெரிவித்தார்கள். தன் இணையரின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யாததும் குடும்ப வன்முறையில் அடங்கும்.

இதற்கு மாறாக இன்னொரு தோழி சொன்ன கதை வித்தியாசமாக இருந்தது. அவர் கணவர் எப்போது அழைத்தாலும் மறுப்புச் சொல்லாமல் ஒத்துழைக்க வேண்டுமாம். இடம், பொருள், நேரம், காலம் என்றெல்லாம் எதுவும் அவர் பார்ப்பதில்லை என்று வருந்தினார். அவருக்கு உடல் ரீதியான நிறைய தொந்தரவுகள் இருந்தன. என்றாலும் அவற்றையெல்லாம் அவர் பொருட்படுத்தியது இல்லை. தினமும் வதைக்கிறார் என்று கண்ணீர் வடித்தாள். பெண்ணுடலின் மீது நிகழ்த்தப்படும் இந்த ஆகப்பெரிய கொடுமை குடும்ப வன்முறை. மனைவியாகவே இருந்தாலும் உறவில் அவளுக்கு விருப்பமா, இல்லையா என்று தெரியாமல் வெறும் கருவி போல அவளைப் பயன்படுத்துவது மாபெரும் தவறு. ஆனால், எத்தனை பெண்கள் இதை மற்றவர்களிடமும் பெற்றவர்களிடமும் சொல்ல இயலும்? மீறிச் சொன்னாலும், “அவர் உன் மீது எவ்வளவு பிரியமாக இருக்கிறார” என்று சொல்லி வாயை அடைத்து விடுகிறார்கள்.

நிறைய குடும்பங்களில் ஒருவருக்கு பட்டப் பெயர் வைப்பதை விளையாட்டாகச் செய்கிறார்கள். குட்டச்சி, குண்டச்சி, அரைக்காப்படி, கறுப்பி என்றெல்லாம் கேலியாக அழைக்கும் போது சம்பந்தப்பட்டவர்களுக்கு மன வருத்தம் மிகும். இப்போது இந்தப் போக்கு குறைந்திருந்தாலும் இன்னும் முழுமையாக மறையவில்லை. இது மனரீதியாக அவர்களுக்கு வேதறையளிக்கும். இது கூடவா குடும்ப வன்முறை என்று கேட்பீர்களேயானால் அழுத்தமான பதில் “ஆமாம்” என்பதுதான். எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் மாமியார், காலமாகி விட்டார். மாமனார் யாருமில்லாத நேரத்தில் தன் மருமகளின் கையைப் பிடித்து இழுக்கப் போக, அது பெரிய பிரச்சனையாகி, அவரை விட்டு அவர்கள் தனிக் குடித்தனம் போய் விட்டார்கள். ஆனால், யாரும் அந்த ஆளைக் கண்டிக்கவில்லை என்பதுதான் அதிர்ச்சி. அந்தப் பெண்தான் ஊருக்குள் தலைகுனிந்து போனார். குடும்பத்துக்குள் நம்பிக்கைக்கு உரிய நபராக இருக்க வேண்டிய அந்த ஆள் இவ்வாறு நடந்து கொண்டது எத்தனை பெரிய வன்முறை?

இவையெல்லாம் இன்று, நேற்று மட்டும் நடப்பதில்லை. காலங்காலமாக நடந்து கொண்டுதான் வருகிறது. அப்போது வெளியில் சொல்லவில்லை. இப்போது துணிச்சலாகப் பகிர்ந்துகொள்கிறார்கள். அவ்வளவுதான் வித்யாசம். இன்னும் ஒரு குடும்பத்தில் தவறாக நடந்து கொண்ட மாமனார், மாட்டிக் கொண்ட போது அந்தப் பெண்ணின் மீதே பழியைத் தூக்கிப் போட்டார். இன்னொரு தோழி நன்கு படித்தவர். படித்து முடித்த உடனே திருமணம் ஆகிவிட்டது. கணவரிடம் வேலைக்குச் செல்லும் விருப்பத்தைத் தெரிவித்த போது அவர் ஒற்றை வார்த்தையில் வேண்டாம் என்று மறுத்திருக்கிறார். காரணம் கேட்டபோது, “என்னையும் என் பெற்றோரையும் கவனித்துக் கொண்டு, நமக்குப் பிறக்கப் போகும் குழந்தைகளை நன்றாக வளர்த்தால் போதும நீ சம்பாதித்து இங்கு ஒன்றும் ஆகப் போவதில்லை” என்று கூறியிருக்கிறார். தன் ஆத்ம திருப்திக்கும் பொருளாதாரப் பலத்துக்கும், தான் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று அவர் சொன்னதை, அவர் கணவர் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. தனது படிப்புக்கும் தனக்கும் நடந்த அவமரியாதையாகவே அவள் அதைக் கருதினாள். ஒவ்வொரு முறையும் வீட்டுச் செலவுக்கும், தனது தனிப்பட்ட செலவுக்கும் அவள் கணவரிடமே பணத்தை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. இதுவெல்லாம் குடும்ப வன்முறையில் சேர்த்தி என்று அவள் கணவருக்கு மட்டுமல்ல, அதே போன்ற சிந்தனையுள்ள அனைவருக்கும் உணர்த்த வேண்டும். என் உறவுப் பெண் கடவுள் நம்பிக்கை இல்லாதவர். அவர் கணவரோ மிகப்பெரிய பக்திமான். தினமும் விளக்கேற்றச் சொல்லி, சாமி கும்பிடச் சொல்லி, விரதம் இருக்கச் சொல்லி என்று பலவிதங்களிலும் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார். இதெல்லாம் குடும்ப வன்முறையில் சேர்த்தியா என்று கேட்டீர்களேயானால் நீங்கள் ஆகப்பெரிய ஆதிக்கவாதி என்று அடித்துச் சொல்வேன். உனக்கு நம்பிக்கை இருந்தால் அது உன்னோடு. எனக்கு இல்லையென்றால் விட்டுவிடு என்றுதான் அந்தப் பெண் சொல்கிறார். ஒருவருக்குப் பிடிக்காத ஒன்றை வற்புறுத்தி செய்யச் சொல்லுவது மிகப் பெரிய வன்முறை.

அன்பென்பது ஆகப் பெரிய வன்முறை என்று சொன்னால் ஒப்புக் கொள்வீர்களா?. இப்போது பார்க்கப் போகும் தோழியின் கதை அவ்வாறு அன்பால் கட்டிவைக்கப்பட்ட புதுவிதமான ஒன்று. அவளுக்குத் திருமணமான புதிதில் இருந்து கணவர் அவளைத் தாங்கோ தாங்கென்று தாங்கினார். அவளது எல்லாச்செயல்களிலும் இவரே முதன்மையாகப் பங்கெடுத்துக் கொண்டார். அன்பென்ற ஆயுதம் கொண்டு அவளது தன்னிச்சையாகச் செயற்படும் சிறகுகளை ஒவ்வொன்றாக முறித்துப் போட்டார். தனக்கென்று ஒரு தனி உலகை அவள் சிருஷ்டித்துக் கொள்ளாதவாறு பார்த்துக் கொண்டார். இப்போது அவரின்றி அவளால் தனித்துச் செயற்பட முடியவில்லை என்பதைவிடத் தெரியவில்லை என்று சொல்லலாம். காலம் கடந்து இப்போதுதான் அந்தப் பொன்விலங்கை அவள் புரிந்து கொண்டாள். ஆனால், அதை வெட்டிவிடும் வழியின்றித் தவித்துக் கொண்டு இருக்கிறாள். மனைவியின் பொது அறிவு வளராமல் பார்த்துக்கொண்டு அவர் மட்டும் நிம்மதியாக இருக்கிறார்.

மாமியார் என்பவர் தன் எதிர்கால வாழ்க்கை குறித்த பாதுகாப்பின்மையாலும், தன் மகனிடம் தனக்கிருக்கும் கண்மூடித்தனமான பாசத்தாலும் அந்தக் குடும்பத்துக்கு வந்திருக்கும் மருமகளை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தொல்லை செய்வதும் குடும்ப வன்முறையில்தான் அடங்கும். ஒரு தோழியின் மாமியார் இதுபோலத்தான், புதிதாக வந்த மருமகள் தன் மகனை முந்தானையில் முடிந்து கொள்ளுவாள் என்று அக்கம் பக்கத்தினர் பேச்சைக் கேட்டு முதல் நாளிலிருந்தே அவள் உடை, தலை அலங்காரம், அவளது செயல்கள் எல்லாவற்றிலும் தலையிட்டு, தனது அதிகாரத்தை நிலைநாட்டப் பார்த்திருக்கிறார். உச்சகட்டமாக மகனும் மருமகளும் தனியறையில் உறங்கக் கூடாதென்று சொல்லும் அளவுக்குப் போனார். அதன் விளைவு இப்போது மகனும் மருமகளும் விவாகரத்து செய்து விட்டனர். மகனுக்கு இன்னொரு திருமணம் செய்ய முழுமூச்சாகப் பெண் தேடி வருகிறார். முன்கதை தெரிந்ததால் யாரும் பெண் தர முன்வரவில்லை. இந்தக் குடும்ப வன்முறையைப் பெண்கள்தாம் அதிகம் அனுபவிக்கின்றனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு வன்முறை செய்வது விளிம்பு நிலையில் உள்ள குடும்பங்களோ, அல்லது வறுமை நிலையில் உள்ள குடும்பங்களோ அல்ல. அங்கும் இருக்கலாம். ஏனென்றால் அங்கே அன்றாடம் வயிற்றுப் பாட்டுக்கு வழி தேடவே நேரம் போதவில்லை. படித்த, அழகான, வசதியுள்ள, அந்தஸ்தில் மேம்பட்ட குடும்பங்களில்தாம் பெரும்பாலும் இத்தகைய வன்முறைகள் நிகழ்கின்றன.

சமுதாயத்தில் பெரிய பொறுப்பில், பதவியில் இருப்பவர்கள்கூடத் தங்கள் வீட்டுப் பெண்களிடம் வன்முறையில் ஈடுபடுகிறார்கள்.

(7ஆம் பக்கம் பார்க்க...)

# வான் பாதுகாப்பை பலப்படும் பிரான்சிடம் இருந்து 100 ரபேல் விமானங்களை வாங்க உக்ரைன் திட்டம்



வான் பாதுகாப்பை பலப்படும் பிரான்சிடம் இருந்து 100 ரபேல் விமானங்களை வாங்க உக்ரைன் திட்டமிட்டுள்ளது. நேட்டோவில் இணைய முயற்சி செய்யும் உக்ரைன் மீது ரஷ்யா 2022ம் ஆண்டு போர் தொடுத்தது. ரஷ்யா உக்ரைன் இடையேயான போர் 3ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகின்றது. சமீபத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இருநாடுகளுக்கு இடையே போரை நிறுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிளும் தோல்வியில் முடிந்தன. இதனை தொடர்ந்து கடந்த சில நாட்களாக இருநாடுகளுக்கும் இடையிலான தாக்குதல் தீவிரமடைந்து வருகின்றது.

வான் பாதுகாப்பை பலப்படும் பிரான்சிடம் இருந்து 100 ரபேல் விமானங்களை வாங்க உக்ரைன் திட்டமிட்டுள்ளது. இதனிடையே உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி பிரான்ஸ் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அப்போது பிரான்சிடம் இருந்து 100 ரபேல் போர் விமானங்கள் உள்பட ராணுவ உபகரணங்கள் வாங்க உக்ரைன் விருப்பம் தெரிவித்து, பிரான்ஸ் உடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, பிரான்ஸ் அதிபர் மேக்ரான் ஆகியோர் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர். (ஐ)

## ரஷ்யாவுடன் வணிகம் செய்யும் எந்த நாடாக இருந்தாலும் தடை விதிக்கப்படும்–டிரம்ப்



ரஷ்யாவுடன் வணிகம் செய்யும் எந்த நாடாக இருந்தாலும் கடும் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்துள்ளார். அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த அதிபர் டிரம்ப்பிடம், ரஷ்யா மற்றும் அதிபர் விளாடிமிர் புதினுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கத்தில் நாடாளுமன்றத்தில் நடவடிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய நேரம் இதுதானா என்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அதிபர், அவர்கள் அதை செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.


அது பரவாயில்லை. அவர்கள் சட்டத்தை இயற்றுகிறார்கள். குடியரசு கட்சியினர் சட்டத்தை இயற்றுகிறார்கள். மிகவும் கடுமையான தடைகள். ரஷ்யாவுடன் வணிகம்செய்யும்எந்தவொரு நாட்டின்மீதும் அவர்கள் அதில் ஈரானை சேர்க்கலாம்.. நான் அதை பரிந்துரைத்தேன். எனவே ரஷ்யாவுடன் வணிகம் செய்யும் எந்தவொரு நாட்டின் மீதும் மிகவும் கடுமையான தடைகள் விதிக்கப்படும்" என்றார். (ஐ)

## இரண்டு பான் கார்டுகள் வைத்திருந்த வழக்கில் அசம் கான், அவரது மகனுக்கு 7 ஆண்டு சிறை



உபி முன்னாள் அமைச்சரும் சமாஜ்வாடி கட்சி மூத்த தலைவர் அசம் கான்(77). இவர் மீது நில அபகரிப்பு, ஊழல், மிரட்டல்,ஆடு திருட்டு உள்பட 84 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 4 வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதர வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில், அசம் கானின் மகனுக்கு 2 பான் கார்டுகள் பெற்ற வழக்கில் அசம் கான், அவரது மகன் அப்துல்லா அசம் ஆகியோருக்கு 7 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2019ல் அப்துல்லா அசம் இரண்டு வெவ்வேறு பிறந்த தேதிகளை சமர்ப்பித்து பான் கார்டு வாங்கியதாக பாஜ பிரமுகர் ஆகாஷ் சக்சேனா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இதை விசாரித்த நீதிமன்றம் அசம் கான், அப்துல்லா அசமுக்கு தலா 7 ஆண்டு சிறை தண்டனை விதித்தது. உபி சீதாபூர் சிறையில் பல மாதங்கள் அடைக்கப்பட்டிருந்த அசம் கான் கடந்த செப்டம்பர் மாதம் சிறையில் இருந்து வெளியே வந்தார்.இப்போது சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளதையடுத்து இருவரும் பலத்த பாதுகாப்புடன் ராம்பூர் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஐ)



## 13 மாதங்களாக உறங்கிய எரிமலை நெருப்பு பிழம்புடன் சீற்றம் ஜப்பானில் விமான சேவைகள் ரத்து

*ஜப்பானில் 13 மாதங்களாக உறங்கிக் கொண்டிருந்த எரிமலை வெடித்து சிதறியதால் அங்கு விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டு உள்ளன.*

*ஜப்பான் எரிமலைகள் அதிகம் காணப்படும் நாடாகும். இங்கு எப்போது எரிமலை விழித்து,நெருப்பு பிழம்புகளை உமிழத் தொடங்கும் என்று தெரியாது. இந்நிலையில் 13 மாதங்களாக அமைதியாக இருந்த சகுராஜிமா என்ற எரிமலை இப்போது நெருப்பை உமிழத் தொடங்கி இருக்கிறது. இந்த எரிமலை ககோஷிமா நகரத்தின் அருகில் உள்ளது.*

*அடுத்தடுத்து 2 முறை நெருப்பு பிழம்புகளை உமிழ்ந்ததால் வானில் கிட்டத்தட்ட 4.4 கிலோ மீட்டர் தூரம் புகை மண்டலமாகவும், புழுதியாகவும் காட்சி அளித்தது. இது அந்நாட்டின் விமான சேவையை முற்றிலும் பாதித்துள்ளது.*

*வான் வழி பாதையில் புகை, சாம்பல்கள் நிரம்பி காணப்பட்டதால் ககோஷிமா விமான நிலையத்தில் இருந்து புறப்பட வேண்டிய 30க்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டு உள்ளது. மேலும் பல்வேறு நகரங்களுக்குச் செல்ல வேண்டிய விமானங்களின் வருகை, புறப்பாடுகளும் தாமதமாகி இருக்கின்றன.*

*சகுராஜிமா எரிமலை ஜப்பானின் பிரபலமான எரிமலையாகும். 2019ம் ஆண்டு நெருப்பு பிழம்புகளை உமிழ்ந்த போது, வானில் 5.5 கிமீ புகை மண்டலமாகவும், தூசுகள் நிரம்பி காணப்பட்டது. (ஐ)*

## சவுதி அரேபியாவிற்கு F-35 ரக விமானங்களை விற்பனை செய்ய ஒப்பந்தம்: அதிபர் டிரம்ப் தகவல்



சவுதி அரேபியாவிற்கு கு-35 போர் விமானங்களை விற்பனை செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்து உள்ளார்.

அமெரிக்காவுக்கு சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் விரைவில் பயணம் மேற்கொள்கிறார். அவரது வருகைக்கு முன்னதாக, அதிபர் டிரம்ப் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து உள்ளார். இது ஏழு ஆண்டுகளுக்கும் பிறகு அமெரிக்காவிற்கு அவர் செல்கிறார். இந்ந சூழலில் சவுதி அரேபியாவுடனான கு-35 ஜெட் விமானங்கள் ஒப்பந்தம் குறித்து அதிபர் டொனால்டு டிரம்ப் கூறியதாவது:

நான் சவுதி அரேபியாவிற்கு கு-35 போர் விமானங்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளேன். அவர்கள் வாங்க விரும்புகிறார்கள். அவர்கள் ஒரு சிறந்த கூட்டாளியாக இருந்திருக்கிறார்கள். நாங்கள் கு-35 போர் விமானங்களை சவுதி அரேபியாவிற்கு விற்பனை செய்வோம். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார்.

துருக்கியிலுள்ள சவுதி தூதரகத்தில் வாஷிங்டன் போஸ்ட் கட்டுரையாளர் ஜமால் கஷோகி வெட்டப்பட்டதன் மூலம், இளவரசர் முகமதுவின் கடைசி அமெரிக்க பயணத்திற்குப் பிறகு, உறவு பாதிக்கப்பட்டது. இந்த கொலையில் சவுதி அரேபியா இளவரசர் பின்னணியில் இருந்து இருக்கலாம் என அமெரிக்க உளவுத்துறை அமைப்புகள் தெரிவித்தன. ஆனால் இந்த குற்றச்சாட்டை சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். தற்போது ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்க-சவூதி உறவில் இருந்த இருண்ட மேகங்களை டிரம்ப் அகற்றியுள்ளார். சவூதி அரேபியாவின் சிறந்த வர்த்தக பங்காளியாக சீனா கடந்த ஆண்டு அமெரிக்காவை விஞ்சியது. ஆனால் அமெரிக்கா ஆயுத விற்பனையில் சவுதி அரேபியாவின் விருப்பமான நாடாக இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நுகேகொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கூட்டணிக்கு கிடைக்கப் பெற்ற தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக ரவி கருணாநாயக்க நாடாளுமன்றம் வந்தார்.

குறித்த கட்சியின் உரித்து ரவி கருணாநாயக்க வசம் இருப்பதால் இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்றைத் தனதாக்கிக்கொண்டார். இதனால் அவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் உள்ளக மோதல் ஏற்பட்டது.

எனினும், ரவி கருணாநாயக்க தன்னை இன்னும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராகவே அடையாளப்படுத்தி வருகின்றார். ஆனால் கட்சிக்குள் உள்ள சிலர் தனக்கு எதிராகச் சதி செய்வதாகவும், உள்ளகக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நுகேகொடை கூட்டத்துக்கு என்னை அழைக்காவிட்டாலும், எதிரணிகள் செல்ல வேண்டும் எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போதே அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"தேசிய அரச பேரவையின் 1971 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை நீக்குவதற்காக 2025.06.16 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரச கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'வளமான நாடு- அழகான வாழ்க்கை' எனும் தொலைநோக்குக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து இலங்கையர்களுக்கும் அரசு வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய, நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அவர்களுடைய துணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதிய உரித்தை இரத்துச் செய்யும் நோக்கில் நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை நீக்குவதற்காக சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலத்துக்குச் சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காகவும் சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது." - என்றார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டமுரணாக தமிழர் தாயகத்தில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்ட பின் நாடாளுமன்றத்தில் மீண்டும் நிறுவுவோம் என்று குறிப்பிட்டு மீளச் சிலையை மக்களின் எதிர்ப்புக்களை மீறி நிறுவியிருக்கும் செயல் எந்த அரசு அதிகாரத்துக்கு வந்தாலும் சிங்களப் பேரினவாதப் போக்கு மாறாது என்பதையே உணர்த்துகின்றது.

புத்தர் சிலையின் பாதுகாப்பு கருதி அகற்றப்பட்டிருக்கின்றது என்று சொல்லுவது தொடர்ச்சியாக சிங்கள மக்களிடத்தில் தமிழர்களை தீயவர்களாகச் சித்தரிப்பதைத்தான் எடுத்துக்காட்டுகின்றது. புத்தர் சிலையை வைத்தது யார்? அமைதியாக தங்கள் அன்றாட வாழ்க்கையை வாழும் தமிழ் மக்களைக் குழப்பியது யார் ? புத்தர் சிலையை அகற்ற வந்த பொலிஸாரின் கன்னத்தில் அறைந்தது யார்? இவர்களுக்கு எதிராக எல்லாம் இந்த நாட்டில் சட்டம் செயற்படாதா? நாட்டின் ஆட்சியாளர்கள் மக்களுக்கான சேவையை ஆற்றுவதைக் காட்டிலும் புத்த பிக்குகளின் பேச்சை வேதவாக்காக கேட்டு நடப்பதையே இனப்பிரச்சினை தொடங்கிய காலகட்டத்திலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஏன் இனப்பிரச்சினையின் முக்கிய காரணம் சிங்கள பௌத்த மயமாக்கல்தான். யுத்தத்தின் ஆணிவேரும் இதுதான். தொடர்ச்சியாக தமிழர் நிலங்கள் புத்த வழிபாடு என்ற பெயரிலே பௌத்த சிங்களமயமாக்கப்பட்டுக்கொண்டே இருந்து வந்துள்ளது.

சிங்களக் குடியேற்றங்களால் தமிழர் குடியேற்றப் பரம்பல் மாற்றியமைக்கப்பட்டுக்கொண்டே இருந்து வந்துள்ளது. வரலாற்றில் மகாவலி ஓயா மற்றும் கல் ஓயா குடியேற்றம் என்று தமிழர் நிலங்கள் முற்றுமுழுதாக பெயர் மாற்றம் பெற்று முழுவதுமாக மாறியிருக்கின்றது. தொடர்ச்சியாக இன்று வரை தமிழர்களின் தொல்லியல் நிலங்களான குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, உகந்தை மலை என்று பல்வேறு இடங்களில் பௌத்த ஆக்கிரமிப்பு நடைபெறுகின்றது.

தையிட்டி, திரியாய் என்று தமிழர் நிலங்களும் இதில் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் இருந்து தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஒரு விடயம் தவறாமல் நடக்கும். அது சிங்கள பௌத்தமயமாக்கல்.

ஏன் என்றால் அது திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல். தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றுவதென்பது மாறி மாறிவரும் சிங்கள ஆட்சியாளர்களால் காலத்துக்குக் காலம் நிகழ்ந்தேறிக்கொண்டே இருந்து வந்துள்ளது.

சிங்கள மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் தமிழ் மக்கள் சிங்கள மக்களின் வழிபாட்டுக்கு என்றுமே எதிரானவர்கள் இல்லை. நாங்கள் அனைத்து மதத்தையுமே சமமாக மதிப்பவர்கள். அனைத்து சமய வழிபாடுகளையும் மதித்து நடப்பவர்கள் அவமதிப்பது கிடையாது. ஆனால் வழிபாடு என்ற பெயரிலே திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்களால் தமிழருடைய நிலங்கள் பறிபோவது என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டோம். தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அவருக்குப் பல்வேறு கட்டுக்கதைகள் கட்டப்பட்டு பௌத்த நிலமாக மாறுவதற்கு எதிரானவர்கள். தமிழருடைய பூர்வீகம் கேள்விக்குறியாக்கப்படுவதற்கு எதிரானவர்கள். தமிழருடைய தொல்லியல் ரீதியான நிலம் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிரானவர்கள். தமிழர் குடியேற்றப்பரம்பல் மாற்றியமைக்கப்படுவதற்கு எதிரானவர்கள். தமிழர்களுடைய இனவிகிதத்தை திட்டமிட்டு மாற்றுவதற்கு எதிரானவர்கள். நாங்கள் ஏன் ஒற்றையாட்சி அரசமைப்பை மறுக்கின்றோம் தெரியுமா? இதனால்தான். சிங்கள பௌத்த பேரினவாத்ததிற்கு அடிபணிந்து கிடப்பதனால் தான்.

இங்கே முதலில் சுற்றுலாத்தளமான கடற்கரையில் புத்தர் சிலையை அமைப்பதற்கான அனுமதி வழங்கியது யார்? பிரதேச சபையிடமிருந்தோ இல்லாவிட்டால் நகர சபையிடமிருந்தோ அனுமதிபெறப்பட்டதா? இல்லை. முற்றமுழுதாக புத்தபிக்குகளே இலங்கையின் நிரந்தர நிறைவேற்று ஜனாதிபதிகளாக இருந்து வந்துள்ளனர்.

சுருக்கமாகச் சொல்லுவதென்றால் நாட்டின் அரச இயந்திரம் புத்த பிக்குகளுக்கு அடிபணிந்து இருக்கின்றது. முழு சட்டங்களையும் தங்கள் பக்கம் வளைக்கும் வலது சாரிகளின் பக்கம் அரசு முழுவதுமாக திரும்பி நிற்கின்றது. தாங்கள் இடது சாரிகள், கம்யூனிச சிந்தாந்தத்தை உள்வாங்கி கொண்டு செயற்படுவதாக தங்களை தாங்களே கூறிக்கொள்ளும் அரசு நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் பக்கம் ஏன் நிற்கவில்லை என்று ஒரு கேள்வி எழுகின்றது.

இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாங்கள் அடக்குமுறைகளையும் ஆக்கிரமிப்புக்களையும் தாங்கிக்கொள்ள முடியுமென்று தெரியவில்லை. இந்தப் பிரச்சினையில் ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது இலங்கையின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கும் செயல்.

இது ஏன் இவ்வளவு காலமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் எடுக்கப்படவில்லை. அரசியல் கைதிகளும் முழுவதுமாக விடுதலை செய்யப்படவில்லை. இதில் அரசு சார்பில் வடக்கு, கிழக்கில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டு இருக்கின்றார்கள்? தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக அரசியல் தீர்வுக்காக இது வரை வாய் திறந்திருக்கின்றார்களா?

ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் பின்னால் ஓர் அரசியல் அரங்கேற்றம் நிகழுவதாகவே நாங்கள் கணிக்கின்றோம்.

1. புத்தர் சிலையை வைத்துப் பார்த்து தமிழ் மக்கள் இன்னும் தமிழ் உணர்வுடன்தான் இருக்கின்றார்களா என்று பார்ப்பது. அவர்கள் எதிர்க்கின்றார்கள் என்றவுடன் அகற்றுவது சிங்கள மக்களிடத்தில் செல்வாக்குச் சரியுமென்ற பின் மீண்டும் நிறுவுவது. 2. அரசைப் பலவீனப்படுத்துகின்ற எதிர்க்கட்சியின் திட்டமிடலாக இருக்கலாம். ஒன்று தமிழ் மக்களிடத்தே பலவீனப்படுத்துவது அல்லது சிங்கள மக்களிடத்தே பலவீனப்படுத்துவது.

3. இறுதியில் புற்றுக்குள்ளே இருந்து வெளியே வந்திருக்கும் பாம்புகளைப்போல் சிலர் வெளியே வந்திருக்கின்றனர். யாரென்று பார்த்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய எதிர்கட்சித் தலைவருக்கு ஆதரவளித்தவர்கள், மாவீரர் தினத்தை யார் எடுத்து நடத்துவது என்று தங்களுக்குள் சண்டையிட்டவர்கள். நீங்கள் உங்களுக்குள் முழுவதுமாக ஒற்றுமை அடையாவிட்டால் எதையுமே சாதிக்க முடியாது.

இறுதியாக எந்தவொரு சிங்கள பேரினவாத அரசும் தமிழ் மக்களின் பக்கம் நீதியின் பக்கம் நின்றதில்லை.

மிகச் சிறந்த அரசியல் தெளிவு பெற்ற நேர்மையான இளைய தமிழத் தேசிய அரசியல் கலாசாரம் வடக்கு, கிழக்கில் வரவேண்டும். அப்போதுதான் வெள்ளம் வர முன் அணை கட்ட முடியும். தமிழ் மக்களாக அனைவரும் உங்கள் சிந்தனைகளில் ஒன்றிணையுங்கள். நாங்கள் ஒன்றை நம்புகின்றோம் தூய தமிழ் தேசியம் நிச்சயம் வெல்லும்." - என்றுள்ளது.

# தி கிரேட் இந்தியன்..........

இத்தகைய வீடுகளில் உள்ள குழந்தைகள்தாம் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். தாங்கள் பிற்காலத்தில் தங்கள் துணையிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை இத்தகைய பெற்றோர்கள் தங்களை அறியாமலே குழந்தைகளின் பிஞ்சு மனதில் பதியனிடுகிறார்கள். இத்தகைய குடும்பங்களில் உள்ள குழந்தைகள் தங்கள் பால்யத்தை இழக்கிறார்கள்.

இத்தகைய குடும்ப வன்முறைகளில் இருந்து குழந்தைகளையும் பெண்களையும் பாதுகாக்க குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005 ஆம் ஆண்டு ஒக்டோபரிலும் அதன் விதிமுறைகள் 2006 ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்டன. இச்சட்டம் 2006 லிருந்து நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது. வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளும் குற்றச் செயல்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களே புகார் தரத் தேவையில்லை. அவர்களால் புகார் செய்ய இயலாத பட்சத்தில் அருகில் வசிப்பவர்கள், சமூகப் பணியாளர்கள், உறவினர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் என்று யார் வேண்டுமானாலும் அவர்கள் சார்பாக அருகில் இருக்கும் காவல் நிலையம், மாவட்ட சமூக நல அலுவலர், குற்றவியல் நடுவர் ஆகியோரிடம் புகார் கொடுக்கலாம்.

இச்சட்டத்தின்படி பாதிக்கப்பட்ட பெண்களுக்குக் கிடைக்கும் நிவாரணங்கள் பிரிவு 18இன் படி பாதிக்கப்பட்ட பெண் பணி புரியும் இடத்துக்குச் சென்று தொல்லை தருவதைத் தடுக்கலாம். குற்றம் சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்ட பெண்ணுடன் கடிதம், தொலைபேசி, இணையம் என்று எந்த வழியிலும் தொடர்பு கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

பிரிவு 19இன் படி பாதிக்கப்பட்ட பெண் தங்கியிருக்கும் இடத்திலிருந்து குற்றம் சாட்டப்பட்ட நபரை வெளியேற்றலாம். அல்லது அந்தப் பெண் பாதுகாப்பாகத் தங்குமிடத்தைக் குற்றம் சாட்டப்பட்ட நபரே ஏற்பாடு செய்து தரலாம்.

பிரிவு 20, 21, 22 ஆகியவற்றின் படி பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வன்முறையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்குப் பொருள் இழப்பு, ஜீவனாம்சம், மருத்துவச் செலவுகள் உள்ளிட்ட பொருளாதாரத் தேவைகளைக் குற்றம் சாட்டப்பட்ட நபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் குழந்தைகளைத் தன்னுடன் வைத்துக் கொள்வதற்கான இடைக்கால ஆணையைப் பெறலாம்.

பிரிவு 23 இன்படி பாதிக்கப்பட்ட பின் தன் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைகளையும் ஆபத்துகளையும் நீதிமன்றத்தில் கூறும் பொழுது அதனால் அவளுக்கு மேற்கொண்டு ஏதும் பிரச்னைகள் வராமல் இருக்க இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவை நீதிமன்றம் வழங்க வேண்டும்.

குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005 இன்படி அறிவிக்கப்பட்ட தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் சேவை அளிப்பவர்களாக நியமனம் செய்யப்படுவார்கள். இவர்கள் இச்சட்டத்துடன் தொடர்புடைய அலுவலர்களோடு இணைந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய பாதுகாப்பு, மருத்துவ உதவி, குழந்தைகளைப் பேணுதல் உள்ளிட்டவற்றில் உதவிகள் செய்வார்கள். பாதிக்கப்பட்ட பெண்கள் உரிய தொழிற்கல்வி பெற்று சொந்தக் காலில் நிற்கவும் இவர்கள் உதவி செய்கிறார்கள்.

உடல் ரீதியான வன்முறை, பாலியல் ரீதியான வன்முறை, வார்த்தைகள் வாயிலான வன்முறை, பொருளாதார முறையிலான வன்முறை இவை எல்லாமே குடும்ப வன்முறையில் அடங்கும். இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுவோரும், பாதிக்கப்படுவோரும் எங்கோ கண்காணாத இடங்களில் வசிப்பதாக எண்ண வேண்டாம். நம் உறவினர் வீடுகளில், நண்பர்கள் வீடுகளில், அக்கம் பக்கத்து வீடுகளில் அவ்வளவு ஏன் நம் வீட்டிலும் கூட இருப்பார்கள். பெண்கள் மீதான இந்த வன்முறைகள் கலாச்சாரத்திலும், பண்பாட்டிலும் ஊறிய, பெண்களைப் புனிதமானவர்களாகப் பூஜிக்கின்ற (?) நம் இந்தியத் திருநாட்டில்தான் அதிகம் அரங்கேறுகின்றன. காலம் காலமாகப் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளை இயல்பானது என்று கட்டமைத்த இந்தச் சமூகத்தின் குரூரப் போக்கு இனியாகிலும் மாற்றப் படவேண்டும் என்பது அவசரமான அவசியம். குடும்ப வன்முறை தொடர்பாக நாடு முழுவதும் 4.71 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன, அவை விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். குடும்ப வன்முறை குறித்து 2014ஆம் ஆண்டு இந்தியா முழுவதிலும் பதியப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 4,547. அவற்றில் தமிழ்நாட்டில் இருந்து மட்டும் பதியப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3,838. அதாவது மொத்த வழக்குகளில் எண்பது சதவீதம் இங்குதான் பதிவாகியிருக்கிறது. இது உள்துறை அமைச்சகத்தால் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்ட புள்ளிவிவரம். கடந்த 2020 இல் கொரோனா காலகட்டத்தில் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை 3,748 வழக்குகள் பதியப்பட்டிருக்கின்றன. 2022 ஆம் ஆண்டு 6,900 குடும்ப வன்முறை வழக்குகள் பதிவாகி இருப்பதாக தேசிய மகளிர் ஆணைய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் உத்தரபிரதேசம் முதலிடத்திலும், தில்லி இரண்டாம் இடத்திலும், மகாராஷ்டிரா மூன்றாம் இடத்திலும் இருக்கிறது. தமிழகத்தில் 2022 ஆம் ஆண்டு அதிகபட்சமாக 1,045 வழக்குகள் பதிவாகியுள்ளன.

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் தொடர்பான அத்தனை அத்தியாவசிய விதிகளும், சட்ட நுணுக்கங்களும் எல்லாப் பெண்களும் கட்டாயம் அறிந்து கொள்ளும் வகையில் பரவலாக்கப் படவேண்டும். தன் மீதும் தன் உரிமைகள் மீதும் நிகழ்த்தப்படும் வன்முறைகளை இனம் கண்டுகொள்ளப் பெண்கள் முதலில் பழக வேண்டும். எதையும் தொலைநோக்குப் பார்வையுடன் சிந்திப்பதும், தெளிவாகப் பேசுவதும் இதற்கு அவசியம். தன்னைச் சுற்றி நடப்பவைகள் குறித்த விழிப்புணர்வுடன் இருப்பது மிக மிக அவசியம். தனக்கான முடிவுகளைத் தானே எடுத்துக் கொள்ளும் வகையில் பெண்கள் இருக்க வேண்டும். அதற்கு முதலில் படிப்பறிவும், சுய சம்பாத்தியமும் கட்டாயம் ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் மாற்றங்கள் தொடங்கினால் அது நல்லதொரு சமுதாயத்தை நிச்சயம் நாளை மலரச் செய்யும். மாற்றங்களை முதலில் நமது வீட்டில் இருந்தே ஆரம்பிப்போமா?







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.11.2025 வெளியிடப்பெற்றது.